## சிறப்புக் குறிப்பு 12
## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் : 2017[1]

### நாணயக் கொள்கை

2017 மாச்சு 24 - மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.25 சதவீதத்திற்கும் 8.75 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

2018 ஏப்பிறல் 04 - துணைநில் வைப்பு வசதி வீதம் 7.25 சதவீதம் மாற்றமின்றி பேணப்பட்ட வேளையில், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமானது 25 அடிப்படைப் புள்ளிகளால் 8.50 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. இந்த தீர்மானமானது துணைநில் வீத வீச்சின் அகலத்தை 150 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 125 அடிப்படைப் புள்ளிகளாகக் குறைத்தது.

### நிதியியல் துறை

#### உரிமம் பெற்ற வங்கிகள்

2017 சனவரி 13 - ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்காக 2017 சனவரி 16ஆம் நாளிலிருந்து தொடங்கும் கடன் பெறுமதி விகிதத்தினை உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கின்ற விதத்தில் 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2017 பெப்புருவரி 01 - பின்வருவன தொடர்பில் 2017 வரவு செலவுத்திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய கொள்கையினை அறிவிக்கும் பொருட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்குச் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், ஏற்றுமதிகள், சுற்றுலா நடவடிக்கைகள், வேளாண்மை, இளைஞர் மற்றும் பெண்கள் போன்ற அடையாளம் காணப்பட்ட துறைகளுக்குக் கொடுகடன் வசதிகள்
- வங்கித்தொழில் பணிகளை அதிகரித்தல்

2017 பெப்புருவரி 15 - 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 5ஆம் இலக்கப் பணிப்புரையின் சில விளக்கங்களைத் திருத்தும் மற்றும் பதிலீடு செய்வதன் மூலம் உந்து ஊர்திகள் தொடர்பிலான கொடுகடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி விகிதத்தின் மீது 2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2017 மாச்சு 22 - 1998 செத்தெம்பர் 07ஆம் நாள் விடுக்கப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளைத் திருத்துகின்ற விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கு நிர்ணயமொன்று விடுக்கப்பட்டது.

2017 மே 26 - 2017 யூலை 01 தொடக்கம், கொடுகடன் சாதனங்கள் மற்றும் ஏதேனும் தவணை தவறிய கடன்கள் இருப்பின் அவற்றின் மீது உரிமம் பெற்ற வங்கிகளினால் அவற்றின் கொள்கைகளுக்கேற்ப வட்டி வீதங்கள் விதிக்கப்படுவது தொடர்பில் வர்த்தக வங்கிகள் போதுமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, அவற்றை அனுமதிக்கின்ற விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2017 மே 29 - வர்த்தக வங்கிகளிலிருந்து, அண்மைய வெள்ளம், மோசமான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு தேசிய நலன்கருதி அத்தகைய கடன்பாட்டாளர்களின் வியாபாரம் மற்றும் வழமையான தொழிற்பாடுகளின் புனரமைப்புக்களுக்கு வசதியளிப்பதற்காக பின்பற்றப்பட்ட தேசிய கொள்கையின் நியதிகளுடன் தொடர்புபட்ட சூழ்நிலைகளுக்கும் ஏற்ப விடய ஒழுங்குகளின் அடிப்படையில் வங்கிகள் சலுகைகளை வழங்கலாம் என்பதனை அறிவிக்கும் விதத்தில் அவற்றிற்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2017 மே 31 - 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 5.1 மற்றும் 5.4 பணிப்புரைகளைத் திருத்தும் மற்றும் பதிலீடு செய்யும் விதத்தில் உந்து ஊர்திகள் தொடர்பிலான கொடுகடன் வசதிகளுக்கான கடன்களுக்கான பெறுமதி விகிதத்தின் மீது 2017ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கித் தொழில் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2017 ஒத்தோபர் 26 - உரிமம் பெற்ற வங்கிகளின் குறைந்தளவு மூலதன தேவைப்பாட்டினை விரிவுபடுத்துவதன் மீது வங்கித் தொழில் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

---

1 இது 2017 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குவதுடன் 2018இன் முதல் நான்கு மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளையும் உள்ளடக்குகின்றது.

| | | |
|---|---|---|
| 2017 நவெம்பர் 29 | - | 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு நிதியியல் சாதனங்கள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டது. |
| 2017 திசெம்பர் 12 | - | 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வெளிநாட்டு நாணய கடன்பாடுகள் மீதான புதிய கொள்கையை அறிவிக்கின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| 2018 சனவரி 08 | - | 2018 வரவுசெலவுத் திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டதற்கிணங்க, 2018 சனவரி 01 தொடக்கம் வங்கிகள் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான கடன் வசதிகளுக்கு தவணை கடிதம் வழங்குவதிலிருந்து விலகி இருப்பதற்கான வங்கிகளை அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று விடுவிக்கப்பட்டது. |
| 2018 சனவரி 09 | - | 2018ஆம் ஆண்டு 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளினால் 2010ஆம் ஆண்டு 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டன. |
| 2018 பெப்புருவரி 08 | - | 2018 சனவரி 01 இலிருந்து, முதன் முதலில் பதிவுசெய்யப்பட்ட பிறகு இலங்கையில் ஒரு வருடத்திற்கு குறைவாக பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் மற்றும் இலத்திரனியல், கலப்பு மற்றும் ஏனைய பதிவுசெய்யப்படாத ஊர்திகள் தொடர்பிலான கடன் வசதிகளுக்கு பிரயோகிக்கத்தக்க கடன் பெறுமதி விகிதத்தினைக் குறிப்பிடுகின்ற அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்குமான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| இனிவர இருப்பவை | - | பாசல் III இன் கீழ் முடுக்கி விகிதத்தை அறிமுகப்படுத்தல். |
| | - | பாசல் III இன் கீழ் தேறிய உறுதியான நிதியிடல் விகிதத்தை அறிமுகப்படுத்தல். |
| | - | உரிமம் பெற்ற வங்கிகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் பின்பற்றலின் மீது அடிப்படை வழிகாட்டல்களை வழங்குதல். |
| | - | உரிமம் பெற்ற வங்கிகளுக்கான புதிய பங்கு மூலதன உடமைக் கொள்கையினை அறிமுகப்படுத்தல். |
| | - | உரிமம் பெற்ற வங்கிகளின் புலம் பெயர்ந்த அலுவலர்களின் தொழில்நிலை மீது வழிகாட்டல்களை வழங்குதல். |
| | - | உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வெளியகக் கணக்காய்வாளர்களைத் தெரிவுசெய்வதற்கான வழிகாட்டல்களில் திருத்தங்களை அறிமுகப்படுத்தல். |
| | - | உரிமம் பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமிப்பதற்கான ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டமொன்றினை அறிமுகப்படுத்தல். |
| | - | உரிமம் பெற்ற வங்கிகளுக்கான மீட்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல். |
| | - | புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட “மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பாளர்” அறிக்கையிடும் முறைமையில் நாளாந்த உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி பரிவர்த்தனைகளில் அறிக்கையிடல் தேவைப்பாட்டுடன் தொடர்புடைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. |
| | - | உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளில் பிரயோகிக்கப்படக்கூடிய தேறிய ஆரம்ப நிலைமை வரையறைகளை அதிகரித்தல். |

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

| | | |
|---|---|---|
| 2017 சனவரி 13 | - | உந்து ஊர்திகள் தொடர்பிலான கொடுகடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி விகிதம் மீது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் 2017ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவுத்திட்டத்திற்கிணங்க திருத்தப்பட்டன. |
| 2017 பெப்புருவரி 17 | - | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகளின் வகுப்புக்களுக்கேற்ப, ஊர்திகளின் வகைகளானது வகைப்படுத்தப்பட்டமையினால் கடன் பெறுமதி விகிதத்தின் மீது 2017 சனவரி 13ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குத் திருத்தங்கள் செய்யப்பட்டன. |
| 2017 பெப்புருவரி 23 | - | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மைய மூலதனத்தினை படிப்படியான அடிப்படையில் அதிகரிப்பதற்கு பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |

2017 மே 30 - வெள்ளம் மற்றும் மோசமான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு தேசிய நலன்கருதி அத்தகைய கடன்பாட்டாளர்களின் வியாபாரம் மற்றும் வழமையான தொழிற்பாடுகளின் புனரமைப்புக்களுக்கு வசதியளிப்பதற்காக பின்பற்றப்பட்ட தேசிய கொள்கைகளின் நியதிகளுடன் தொடர்புபட்ட சூழ்நிலைகளுக்குப் பின்வரும் சலுகைகளை வழங்குவதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் அனுமதிக்கப்பட்டன.

- தொழிற்படுகின்ற அனைத்துக் கொடுகடன் வசதிகள் தொடர்பிலும் 3 மாதங்களை விஞ்சாத பிற்போடப்பட்ட கடன் தீர்ப்பனவுக் காலமொன்றினை வழங்குதல்.
- மேலே குறிப்பிடப்பட்ட பிற்போடப்பட்ட கடன்பாட்டாளர்களினதும் தமது வியாபார நடவடிக்கைகளை மீளத்தொடங்குவதற்கு/ மீளமைப்பதற்கு மீள்அட்டவணையிடப்பட்ட நியதிகளின் அடிப்படையில் தமது கடன்களைத் தீர்ப்பனவு செய்ய விரும்புகின்ற மேலே கூறப்பட்டவாறாக பாதிக்கப்பட்ட செயற்படாக் கடன்பாட்டாளர்களினதும் தவணை தவறிய கடன்கள் மீதான தண்ட வட்டி வீதத்தினை நீக்கிவிடுதல்.

2017 யூன் 02 - உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்திகளின் வகுப்புக்களுக்கேற்ப, ஊர்திகளின் வகைகளானது வகைப்படுத்தப்பட்டுள்ளமையினால் கடன் பெறுமதி விகிதத்தின் மீது 2017 பெப்புருவரி 17ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குத் திருத்தங்கள் செய்யப்பட்டன.

2018 சனவரி 16 - நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பாக 2018ஆம் ஆண்டு 01ஆம் இலக்க நிதியியல் வியாபாரச் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2018 பெப்புருவரி 08 - 2018 சனவரி 01இலிருந்து, முதன் முதலில் பதிவு செய்யப்பட்ட பிறகு இலங்கையில் ஒரு வருடத்திற்கு குறைவாக பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஊர்திகள் மற்றும் இலத்திரனியல், கலப்பு மற்றும் ஏனைய பதிவுசெய்யப்படாத ஊர்திகள் தொடர்பான கடன் வசதிகளுக்கு பிரயோகிக்கத்தக்க கடன் பெறுமதி விகிதத்தை குறித்துறைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான புதிய மூலதனப் போதுமை கட்டமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**காப்புறுதி**

2017 சனவரி 01 - பூட்கை உடமையாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் அதேவேளையில் தொழில்சார் நிபுணத்துவத்தினை ஊக்குவிக்கும் நோக்குடனும் இத்தொழில்துறையின் நன்மதிப்பினை உயர்த்தும் விதத்திலும் காப்புறுதிக் கோரல்கள் மீது விசாரணைகளை நடத்துவதன் மீதான வழிகாட்டல்களை இலங்கை காப்புறுதிச் சபை விடுத்தது.

2017 மே 09 - காப்புறுதித் தரகுக் கம்பனிகள் காப்புறுதித் தரகு வியாபாரம் தவிர்ந்த மற்றைய துணைப் பணிகளை வழங்குவதற்கு இலங்கை காப்புறுதி சபையின் முன்னொப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற தேவைப்பாடு தொடர்பில் பணிப்புரையொன்றினை இலங்கை காப்புறுதி சபை விடுத்தது.

2017 ஓகத்து 28 - ஏதாவது காப்புறுதித் தரகர் சார்ந்து விற்பனை செய்வதற்கு ஆதரவு தேடல் மற்றும் /அல்லது சந்தைப்படுத்தல் மற்றும் /அல்லது ஏதாவது வெளிநாட்டு நலக் காப்புறுதி உற்பத்திகளை வைத்துக்கொள்வதற்கான தரகர்களின் துணை முகவர்களாக செயற்படுவதற்கு அனைத்து காப்புறுதி தரகர்களையும் தடைசெய்கின்ற பணிப்புரைகளை இலங்கை காப்புறுதிச் சபை விடுத்தது.

2017 ஒத்தோபர் 19 - இலங்கை காப்புறுதிச் சபையானது, 2017ஆம் ஆண்டு 23ஆம் இலக்க காப்புறுதித் துறைக் கட்டுப்பாட்டு (திருத்தப்பட்ட) சட்டத்தினால் இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழு என மீள்பெயரிடப்பட்டது.

2018 திசெம்பர் 18 - பட்டயக் காப்புறுதி நிறுவனத்தின் இணைத்தகுதியை அல்லது அதற்கு சமனானதொரு தகுதியை கொண்டிருக்கின்ற பிரத்தியேக அலுவலராக ஆகக்குறைந்தது ஒரு நபருக்கேனும் வேலை வழங்குவதற்கு ஒவ்வொரு காப்புறுதியாளர்களையும் தேவைப்படுத்துகின்ற ஒரு பணிப்புரையை இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழு விடுத்தது.

**மூலதனச் சந்தை**

2017 மே 09 - சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்தான அனுமதியிற்குட்பட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை பட்டியற்படுத்தும் பொருட்டு பல்நாட்டு நாணயச் சபையொன்றினை நிறுவுவதற்கு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிற்கு ஒப்புதலளிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2017 யூன் 06 | - | கூறு நம்பிக்கைகளைப் பொதுமக்களுக்கு சந்தைப்படுத்தும் பொழுது கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளினால் பின்பற்றப்பட வேண்டிய விளம்பரங்களின் உள்ளடக்கம் மற்றும் ஊக்குவிப்பு விடயங்கள் மீது இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு வழிகாட்டல்களை விடுத்தது. |
| 2017 யூன் 13 | - | கொழும்புப் பங்குப் பரிவத்தனையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பட்டியலிடப்படுவதற்கு வசதியளிப்பதற்காக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் சபையொன்றினை நிறுவுவதற்கு இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஒப்புதலளித்தது. |
| 2017 யூன் 28 | - | கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இணங்காமைக்கான குறைந்தபட்ச பொது மிதவை அமுலாக்க விதிகளுக்கு இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஒப்புதலளித்தது. |
| 2017 ஓகத்து 01 | - | பங்குத் தரகு நிறுவனங்களின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதன போதுமைத் தேவைப்பாடுகளுக்கான கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, பங்குத் தரகக் கம்பனிகளின் மீது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஒப்புதலளித்தது. |
| இனிவரவிருப்பவை | - | புதிதாக இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமொன்றினை அறிமுகப்படுத்தல் |
| | - | லண்டன் கையேற்புக்களுக்கு அண்மையில் முன்வைக்கப்பட்ட திருத்தங்களின் அவதானிப்பில் புதிய கையேற்புக்கள் மற்றும் இணைப்புக் குறிப்பீட்டில் திருத்தங்களை மேற்கொள்ளல். |
| | - | கொழும்புப் பங்குப் பரிவர்த்தனயின் பரவல்படுத்தலினை நடைமுறைப்படுத்தல். |

### சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| 2017 சனவரி 20 | - | சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் - கட்டம் II இன் தொழிற்பாடுகளை 2019 திசெம்பர் 31 வரை நீடிக்கும் விதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. |
| 2017 பெப்புருவரி 06 | - | செயற்றிட்டத்தின் தன்மையினைப் பொறுத்து, வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ், கடன் மீள்கொடுப்பனவுகளுக்கான உயர்ந்தபட்சக் காலம், உயர்ந்தபட்ச விடுகைக் காலமான ஓராண்டு உட்பட 5 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2017 பெப்புருவரி 08 | - | அரசாங்கத்தின் சார்பில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்திக்காகவும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகவும் "சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்களை நோக்கியது" என்ற பெயரிலான புதிய கடன் திட்டம் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைக்கிடப்பட்டது. |
| 2017 மாச்சு 01 | - | சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் - கட்டம் II இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களானது, கடன் மீள்கொடுப்பனவுக் காலத்தினை 4 வருடத்திலிருந்து 5 வருடமாக அதிகரிப்பதற்கு மற்றும் தேசிய வேலைவாய்ப்புத் தகைமைத் திட்டம் மற்றும் முயற்சியாண்மை திறன்கள் அபிவிருத்தித் திட்டத்தினை பூரணப்படுத்தியிருக்கின்ற உபகடனாளிகளின் தகமைகளை மாற்றுவதற்கும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. |
| 2017 ஏப்பிறல் 03 | - | தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டுக் காலம் 2017 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. |
| 2017 ஏப்பிறல் 26 | - | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் பகுதியளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நிறுவுவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. |
| 2017 யூன் 28 | - | 2017இல் நாட்டில் நிலவிய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கைகளை மீட்பதற்காக சலுகையடிப்படையிலான நிதி வசதிகளை வழங்குவதற்காக தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அனர்த்தத்திற்குப் பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்பு கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. |
| 2017 யூலை 11 | - | "தருண திறிய" கடன் திட்டத்தின் கடன் அளவினை ரூ.150,000 இலிருந்து ரூ.1 மில்லியனுக்கு அதிகரிப்பதற்காக செயற்படுத்தல் அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டது. |
| 2017 ஓகத்து 02 | - | "தருண திறிய" கடன் திட்டத்தின் கடன் மீள்கொடுப்பனவு காலத்தினை 36 மாதங்களிலிருந்து 48 மாதங்களாக அதிகரிப்பதற்கு செயற்படுத்தல் அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டது. |

2017 ஓகத்து 18 - அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கு சலுகை ரீதியிலான நியதிகளிலும் நிபந்தனைகளிலும் கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் "அத்வெல" கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2017 யூலை 20 - இலங்கைச் சுங்கத்திற்கான அதேநேரக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் குறியீட்டினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்காக, கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்சப் பெறுமதியினை அதிகரிக்கும் பொருட்டு 2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கைக்குப் பதிலாக, கொடுக்கல்வாங்கல் மீதான உயர்ந்தபட்ச வரையறை மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழிக் கட்டணம் என்பன மீது 2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2018 சனவரி 18 - கொடுப்பனவுப் பணி வழங்குவதற்காக நிதியியல் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் தொலைபேசி பயன்படுத்தல்களின் குறைந்தபட்ச இணக்க நியமங்களை சரிசெய்து கொள்வதற்கு தொலைபேசி பயன்படுத்தல்களுடன் தொடர்புபட்ட கொடுப்பனவுகளுக்கான குறைந்தபட்ச இணக்க நியமங்கள் மீது வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

- சேவை வழங்குநர்களினூடாக கொடுப்பனவு அட்டைகளின் அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்களின் கையகப்படுத்தல் மீது நிபந்தனைகளை குறித்துரைப்பதற்காக சேவை வழங்குநர்களினூடாக கொடுப்பனவு அட்டைகளின் அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல் மீது பணிப்புரை விடுக்கப்பட்டது.

### பணம் தூயதாக்கல் மற்றும் நிதியியல் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளல்

2017 சனவரி 17 - இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறை மேற்பார்வைத் திட்டம் 2017இன் அடிப்படையில் தளத்திலான மேற்பார்வை மீதான சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

2017 சனவரி 20 - நாணய அல்லது பெறுமதி மாற்ற சேவை வழங்குநர்களின் கடப்பாடுகளுக்கு இணங்கி பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் நிதியியல் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளல் மீது 2017ஆம் ஆண்டு 1 இலக்க வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.

2017 மாச்சு 30 - ஏதேனும் சட்ட ரீதியற்ற நடவடிக்கைகள்/ பாரிய குற்றங்களை மேற்கொண்டதோடு தொடர்புபடக்கூடிய ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியிடல் பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கடப்பாடுகளைப் பரிந்துரைத்து விசேட வர்த்தமானி இல. 2015/56 வெளியிடப்பட்டது.

2017 ஒத்தோபர் 06 - கொறிய சனநாயக மக்கள் குடியரசின் மீது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1718இல் அமுல்படுத்தலை பிரகடனப்படுத்துகின்ற ஒழுங்குமுறைகள் விசேட வர்த்தமானி இல.2039/32 மூலம் வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டன.

- பாரிய அழிவினை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களின் பெருக்கம் குறித்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1540இன் அமுல்படுத்தலை பிரகடனப்படுத்துகின்ற ஒழுங்குமுறைகள் விசேட வர்த்தமானி இல. 2039/31 வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டன.

- வெளிவிவகார அமைச்சரினால், மேலுள்ள இரண்டு ஒழுங்குமுறைகளுக்குமான தகுதிவாய்ந்த அதிகாரியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டார்.

2018 சனவரி 10 - 2018ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பெயர் குறிக்கப்பட்ட நிதிசாரா தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன) விதிகளுக்கேற்ப பெயர் குறிக்கப்பட்ட நிதிசாரா தொழில்களுக்கு "இடர் அடிப்படையிலான அணுகுமுறை" ஒன்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான வாடிக்கையாளர் விழிப்புக்கவனத்தை மேற்கொள்வதற்கு விசேட வர்த்தமானி இல. 2053/20 வெளியிடப்பட்டது.

2018 சனவரி 11 - நிதியியல் நிறுவனங்களுக்கான பணம் தூயதாக்கல் மற்றும் நிதியியல் பயங்கரவாத இடர்நேர்வு முகாமைத்துவம் மீது 2018ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டது.

### வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

2017 மாச்சு 07 - நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் வதிகின்ற இலங்கையர்களுக்கும், இலங்கையிலும் வேறு ஏதேனுமொரு நாட்டிலும் இரட்டைப் பிரசா உரிமையினை பெற்றுக் கொண்டுள்ள தனிப்பட்டவர்களுக்கும் இலங்கையின் வதிவிட சொத்துக்களின் கையேற்பு/ கட்டுமானம்/ அபிவிருத்தி/ புதுமையாக்கம் என்பவற்றுக்காக கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதியளிக்கப்பட்டனர்.

2017 யூன் 23 - பல்வேறு வகையான கணக்குகளுக்கு வரவு வைக்கும் நோக்கத்திற்காக செலாவணிக் கம்பனிகள்/ இல்லங்களிலிருந்து வங்கி முறைமையினூடு உள்முக பணவனுப்பலாக பெறப்பட்ட நிதியாகக் கருதிக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

2017 யூலை 05 - உள்நாட்டு அரசிறை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் “வரி விலக்கப்பட்ட கருத்திட்டங்கள்”இல் தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்குவோருக்கு வழங்கப்பட்டிருந்த வருமான வரி விலக்கல்கள் புறக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக, பன்னாட்டு பணி வழங்குவோருக்கும் அவர்களது ஊழியர்களுக்கும் புதிய வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி புறக்கீடு செய்யப்பட்டமை அறிவிக்கப்பட்டது.

2017 நவெம்பர் 20 - நடைமுறைக் கணக்குப் பரிவர்த்தனைகள் மற்றும் பல்வேறு வகையான வெளிநாட்டு நாணய/ரூபாய் கணக்குகள் என்பவற்றுடன் இணைந்த செயன்முறைகளை இலகுபடுத்தல் மற்றும் மூலதன பாய்ச்சலை மேலும் தாராளமயமாக்கல் போன்ற நோக்குடன், 1953ஆம் ஆண்டு 24ஆம் இலக்க செலாவணி கட்டுப்பாட்டு சட்டத்தை இரத்துச் செய்து 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு செலாவணி தொழிற்பாடுகளுக்கான புதிய சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புக்கள் அமுல்படுத்தப்பட்டன.

- புதிய சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் இடத்திற்கு வெளிநாட்டு சொலவணி திணைக்களம் நிறுவப்பட்டது.
- புதிய சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட பிரதான பிரமானங்கள்/ கொள்கைகளின் சாராம்சம் கீழே காட்டப்பட்டுள்ளது.
    - 2017 நவெம்பர் 20 இற்கு முன்னர் உள்நாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது வெளிநாட்டு செலாவணித் திணைக்களத் தலைவருக்கு வெளிப்படுத்தப்படாததும், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைச்சட்டத்தின் கீழான, 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழான அல்லது இலஞ்சச் சட்டத்தின் (அத்தியாயம் 26) கீழ் அது தொடர்பில் ஒரு சட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதுள்ளதும் அல்லது ஒரு சட்ட நீதிமன்றத்தினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டிராததுமான, ஆதனமாகவிராததுமான ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்கு அனுப்புகின்ற இலங்கையில் வதிபவராகவுள்ள எவரேனும் இலங்கைப் பிரசை, 1 மில்லியன் ஐ.அ.டொலர்களை மிஞ்சிய பணவனுப்பலாயின் 1 சதவீத பணவனுப்பல் கட்டணத்திற்கு ஆளாவார்.
    - பங்குகள் மற்றும் இறையாண்மை முறிகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு முதலீட்டு வகைப்பாடுகள், அலகுகள் மற்றும் படுகடன் பிணையங்களின் முதலீட்டை அனுமதிக்கின்றதாக விரிவுபடுத்தப்பட்ட அதேவேளையில் இலங்கை குடியிருப்பாளர்களுக்கான அதிக முதலீட்டு வாய்ப்புக்களும் உருவாகியது.
    - இலங்கை இடம்பெயர்வாளர்களின் சார்பில் தகைமையான இடம்பெயர்வு கொடுப்பனவுகளை மாற்றல் செய்ய மற்றும் இடப்பெயர்வு மாற்றல்களின் நிலவுகின்ற வரம்புகளை அதிகரிக்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பொதுவான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.
    - நிதி நிறுவனங்களிலான நிலையான வைப்பு, இலங்கை மத்திய வங்கி அல்லது ஏதேனும் வேறு சட்ட ரீதியான அமைப்புகளினால் வெளியிடப்படுகின்ற பிணையங்கள் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையில் தோற்றுவிக்கப்படாத கம்பனிகளின் பங்கு மூலதனம் போன்றவற்றிலான முதலீடுகளை உள்ளடக்கி இலங்கையில் வதியாதோருக்கான முதலிடக்கூடிய கிடைப்பனவான பரப்பு விரிவுபடுத்தப்பட்டது.
    - செலாவணி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் நுண்பாக தொழிற்பாட்டு ரீதியை அடிப்படையாகக் கொண்டு அனுமதிக்கப்பட்ட பதினெட்டு கணக்குகள் புதிய வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழ் தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள், உள்நோக்கிய முதலீட்டு கணக்குகள், மூலதன கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகள் மற்றும் வெளிநோக்கிய முதலீட்டு கணக்குகள் எனப்படும் பிரதான ஐந்து தொகுதிகளுக்கு மீள் வகைப்படுத்தப்பட்டது.
    - இலங்கையிலிருந்து புறப்படுகின்ற அல்லது உள்வருகின்ற நபர்கள், 15,000 ஐ.அ.டொலருக்கு மேற்பட்ட மொத்தப் பெறுமதியை அல்லது 10,000 ஐ.அ.டொலர்கள் அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயங்களின் நாணயத் தாள்களை காவிச்செல்வதாயின் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கான வெளிப்படுத்தலிற்கிணங்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், பன்னாட்டு நியமங்களை நடைமுறை ஒழுங்குவிதிகள் அனுகுகின்றது என்பதை உறுதிப்படுத்தி, இலங்கையில் வதிகின்ற அல்லது நாட்டினுள் இருக்கின்ற எந்தவொரு நபரும் 10,000 ஐ.அ.டொலகள் பெறுமதி வரையிலான வெளிநாட்டு நாணயத் தாள்களை தனது உடமையின் கீழ் எந்தவொரு காலப்பகுதிக்கும் வைத்திருக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

- பன்னாட்டு நியமங்களை பின்பற்றுகின்ற அதேவேளை தெளிவு மற்றும் வெளிப்படையான தன்மையினை உறுதிப்படுத்துகின்ற வகையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் அகவிதிகள் XXX (டி) இன் அடிப்படையில் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் பரந்த நான்கு தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டன. அதற்கிணங்க, வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கையில் பயனுறிதி அதிகரிப்பதனை உறுதிப்படுத்தி அவ்வாறான கொடுக்கல்வாங்கல்களிலான நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறை கொடுக்கல்வாங்கல்களை செயல்படுத்துவதற்கான அதிகாரங்கள் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ஏற்கனவே நிலவிய மூன்று வகையான கடன் திட்டங்கள் திருத்தப்பட்டு வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான புதிய கடன்களுக்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிரந்தர வதிவிடத்தில் கவனம் செலுத்துவதிலும் பார்க்க இலங்கையினுள் செலவுசெய்த நாட்களின் ஒட்டுமொத்தத்தை அடிப்படையாக (அதாவது 183 நாட்கள்) கொண்ட ஒரு நபரினுடைய குடியிருப்பு நிலைமையினை தீர்மானிப்பதற்கான புதிய பிரமாணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

## விலைத் திருத்தங்கள்

2017 சனவரி 09 - மண்ணெண்ணெயின் சில்லறை விலை ரூ.5 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.44 இற்குக் குறைக்கப்பட்டது.

2017 சனவரி 27 - குறிப்பிட்ட சில பொருட்களின் உயர்ந்தபட்ச சில்லறை விலை பின்வரும் விதத்தில் குறைக்கப்பட்டது:

- மைசூர் பருப்பின் விலை (சிவப்புப் பருப்பு) கி.கிறாமிற்கு ரூ.169 இலிருந்து ரூ.159 இற்கு
- நெத்தலிக் கருவாடு (தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது) கி.கிறாமிற்கு ரூ.495 இலிருந்து ரூ.490 இற்கு
- நெத்தலிக் கருவாடு (துபாயிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது) கி.கிறாமிற்கு ரூ.410 இலிருந்து ரூ.405 இற்கு
- பயறு கி.கிறாமிற்கு ரூ.220 இலிருந்து ரூ.205 இற்கு
- வெள்ளைச் சீனி கி.கிறாமிற்கு ரூ.95 இலிருந்து ரூ.93 இற்கு
- உருளைக்கிழங்கு (இறக்குமதி செய்யப்பட்டது) கி.கிறாமிற்கு ரூ.120 இலிருந்து ரூ.115 இற்கு

2017 பெப்புருவரி 08 - பின்வரும் வகையிலான அரிசியின் உயர்ந்தபட்ச சில்லறை விலை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது.

- சம்பாவின் விலை கி.கிறாமிற்கு ரூ.80
- நாட்டு அரிசியின் விலை கி.கிறாமிற்கு ரூ.72
- பச்சை அரிசியின் விலை கி.கிறாமிற்கு ரூ.70

2017 பெப்புருவரி 17 - பின்வரும் வகையிலான அரிசியின் உயர்ந்தபட்ச சில்லறை விலை பின்வருமாறு திருத்தப்பட்டது.

| அரிசியின் வகை | உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் உயர்ந்தபட்ச சில்லறை விலை (கி.கிறாமிற்கு ரூ.) | இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் உயர்ந்தபட்ச சில்லறை விலை (கி.கிறாமிற்கு ரூ.) |
|---|---|---|
| சம்பா அரிசி (கீரி சம்பா மற்றும் சூதுறு சம்பா தவிர) | 90 | 80 |
| நாட்டரிசி | 80 | 72 |
| பச்சை அரிசி | 78 | 70 |

- மருத்துவச் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச சில்லறை விலையினை நிர்ணயிப்பதற்காக 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க மருத்துவச் சாதனங்களின் விலையிடல் ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

2017 மாச்சு 14 - பின்வரும் பொருட்களின் மீதான உயர்ந்தபட்ச சில்லறை விலை நீக்கப்பட்டது.

- வெள்ளைச் சீனி

- உறைய வைக்கப்பட்ட அல்லது குளிரூட்டப்பட்ட தோலுடன் அல்லது தோலில்லாத புறொய்லர் கோழி இறைச்சி (முழுக் கோழி)

2017 யூலை 01 - பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் 6.28 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் ரூ.9 இலிருந்து ரூ.10 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2017 ஓகத்து 16 - அரிசி மீது விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலை அகற்றப்பட்டது.

2017 ஓகத்து 30 - நெத்தலிக் கருவாட்டின் மீது (இறக்குமதி செய்யப்பட்டது - தாய்லாந்து மற்றும் டுபாய்) விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலை அகற்றப்பட்டது.

2017 செத்தெம்பர் 26 - திரவப் பெற்றோலிய வாயுவின் 12.5 கி.கிறாம் உருளையொன்றின் விலை ரூ.110 இனால் ரூ.1,431இற்கு அதிகரிக்கப்பட்டது.

2017 நவெம்பர் 08 - 400 கிறாம் சஸ்டஜன் மீது விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலை அகற்றப்பட்டது.

2017 திசெம்பர் 06 - சில பொருட்களின் உயர்ந்தபட்ச சில்லறை விலை பின்வருமாறு குறைக்கப்பட்டது.

- மைசூர் பருப்பின் விலை கி.கிறாமிற்கு ரூ.159 இலிருந்து 130 இற்கு
- கருவாடு (கட்டா) விலை கி.கிறாமிற்கு ரூ.1,100 இலிருந்து ரூ.1,000 இற்கு

- தேங்காய் ஒன்றுக்கான உயர்த்தப்பட்ட சில்லறை விலை ரூ.75 விதிக்கப்பட்டது.

2017 திசெம்பர் 26 - நாட்டரிசியின் உயர்ந்தபட்ச சில்லறை விலை பின்வருமாறு திருத்தப்பட்டது.

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை கி.கிறாமிற்கு ரூ.80 இலிருந்து ரூ.74 இற்கு
- இறக்குமதி செய்யப்பட்டவை கி.கிறாமிற்கு ரூ.72 இலிருந்து ரூ.74 இற்கு

## வரித் திருத்தங்கள்

### தனியாள் வருமான வரி

2018 ஏப்பிறல் 01 - 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்திற்கேற்ப முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:

- தனியாள் வருமானத்திற்கான தனியாள் வரிவிலக்கின் மட்டம் வருடமொன்றிற்கு ரூ.500,000 இல் பேணப்பட்டது.
- வதியும் தனியார்களுக்கான தொழில்நிலை வருமானம் மீதான விலக்களிப்பு வருடமொன்றிற்கு ரூ. 750,000இலிருந்து ரூ. 1.2 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.
- வருமான வரி அடுக்குகள் ரூ.500,000 இலிருந்து ரூ.600,000 இற்கு அகலப்படுத்தப்பட்டதுடன் முன்னேற்ற வரி விகிதக் கட்டமைப்பு பின்வருமாறு அறிமுகப்படுத்தப்பட்டது.

| வரி விதிக்கத்தக்க வருமானம் (வருடாந்தம்) | | | |
|---|---|---|---|
| முன்னைய சட்டம் | வரி வீதம் | நடைமுறைச் சட்டம் | வரி வீதம் |
| முதலாவது ரூ.500,000 | 4% | முதலாவது ரூ.600,000 | 4% |
| ரூ.500,001 - ரூ.1,000,000 | 8% | ரூ.600,001 - ரூ.1,200,000 | 8% |
| ரூ.1,000,001 - ரூ.1,500,000 | 12% | ரூ.1,200,001 - ரூ.1,800,000 | 12% |
| ரூ.1,500,000இனை விஞ்சியவற்றிற்கு | 16% | ரூ.1,800,001 - ரூ.2,400,000 | 16% |
| | | ரூ.2,400,001 - ரூ.3,000,000 | 20% |
| | | ரூ.3,000,000இனை விஞ்சியவற்றிற்கு | 24% |

- மூலதன இலாப வரியானது 10 சதவீதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

### கம்பனி வருமான வரிகள்

2018 ஏப்பிறல் 01 - 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்திற்கேற்ப கம்பனி வருமான வரி வீதங்கள் 3 அடுக்கு அமைப்பிற்கு, திருத்தப்பட்டிருக்கின்றது.

(அ) 14 சதவீதம் கொண்ட குறைந்த வீதம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், பொருட்கள் அல்லது பணிகளின் ஏற்றுமதிகள், வேளாண்மை தொழில்முயற்சிகள் மற்றும் கல்விப் பணிகள் என்பனவற்றிலிருந்தான இலாபம் மற்றும் வருமானத்திற்கு பிரயோகிக்கப்படும்.

(ஆ) பந்தயம் மற்றும் சூதாட்டம், குடிவகை மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான இலாபம் மற்றும் வருமானத்திற்கு 40 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதம் பிரயோகிக்கப்படும்.

(இ) வங்கித்தொழில் மற்றும் நிதி, காப்புறுதி, குத்தகைக்குவிடல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் போன்றவை உட்பட மற்றைய அனைத்துத் துறைகளினதும் இலாபங்கள் மற்றும் வருமானங்களுக்கு நியம வீதமான 28 சதவீதம் பிரயோகிக்கப்படும்.

### பிடித்துவைத்தல் வரி

2018 ஏப்பிறல் 01 - 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்திற்கேற்ப முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:

- வங்கி வைப்புக்களிலிருந்தான தனிநபர் வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரி 2.5 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படும்.
- ரூ.1.5 மில்லியன் வரையிலான வங்கி வைப்புக்களிலிருந்து மூத்த பிரசையால் பெறப்பட்ட வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரியானது விலக்களிக்கப்பட்டுள்ளது.
- திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான வட்டி வருமானத்தின் மீது பிடித்துவைத்தல் வரியானது விலக்களிக்கப்பட்டுள்ளது.
- மாதமொன்றிற்கு ரூ.50,000 இனை விஞ்சும் பணிக்கட்டணம் மற்றும் ஒப்பந்த கொடுப்பனவுகளுக்கு பிடித்துவைத்தல் வரியினை அமுல்படுத்தல்.

### பொருளாதார பணிக் கட்டணம்

2017 ஏப்பிறல் 01 - பொருளாதார பணிக் கட்டணம் மீதான உச்சஎல்லை, காலாண்டிற்கு ரூ.50 மில்லியனிலிருந்து காலாண்டிற்கு ரூ.12.5 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது.

- உந்து ஊர்திகளின் இறக்குமதிகளின் ஒவ்வொரு கப்பற் சரக்குத் தொகுதிகள் தொடர்பில் இறக்குமதியாளரொருவர் (பொருளாதார பணிக் கட்டணத்தினைச் செலுத்துவதற்கான உச்ச எல்லையினை கவனத்திற் கொள்ளாது) சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட கிரயம், காப்புறுதி மற்றும் சரக்குக் கட்டணப் பெறுமதி மீது முன்னதாகவே உந்து ஊர்திகள் மீதான பொருளாதாரப் பணிக் கட்டணம் விதிக்கப்பட்டது.
- பொருளாதார பணிக் கட்டண பொறுப்புக்களுக்கு ஆளாகாது காணப்பட்ட இலங்கை மத்திய வங்கி பொருளாதார பணிக் கட்டணத்தினைச் செலுத்துவதற்கான பொறுப்புக்குள்ளாக்கப்பட்டது.

### பெறுமதிசேர் வரி

இனிவரவிருப்பவை - எச். எஸ் குறியீட்டு இலக்கம் 84.79 மற்றும் 89.50 என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சூரிய ஒளிக்கதிர் கருவி மீதான பெறுமதிசேர் வரி விலக்கு வழங்கப்படும்.

- தாவரங்கள் மற்றும் பூக்கள், பிளாஸ்டிக் மணிகள், நூல், துணிகள், பொருட்கள் மற்றும் மரங்கள் மற்றும் சாதனங்கள், கண்ணாடி மணிகள், பொறி மற்றும் இயந்திரவிம், இலத்திரனியல் பொருட்கள், ஆகாய விமானப் பகுதிகள், மூக்குக்கண்ணாடிகள், புகைப்படக் கருவிகள், எரியிகள், கடிகாரங்கள் போன்றவற்றின் மீதான தெரிவுசெய்யப்பட்ட எச். எஸ் குறியீடுகள் மீது பெறுமதிசேர் வரி நீக்கப்படும்.
- வீட்டுத்தொகுதியிலுள்ள வீட்டு அலகுகளின் விற்பனை மீது பெறுமதிசேர் வரி விலக்களிக்கப்படும்.

### தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

2017 ஏப்பிறல் 01 - பின்வரும் பொருட்களுக்கும் பணிகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டது.

- வெளிவாரி நுழைவு வழி தொழிற்பாட்டாளர்களினால் உள்நாட்டு தொழிற்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும் பன்னாட்டு தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் வழங்கல்.

- செய்தித்தாள்கள் தவிர்ந்த, அச்சிடப்பட்ட நூல்கள், இதழ்கள், சஞ்சிகைகள் மற்றும் காலாந்தர வெளியீடுகளின் வழங்கல்.
- இலங்கை மின்சபையின் மின் வழங்கல் தவிர்ந்த ஏனைய மின்வலு வழங்கல்கள்.

2017 ஓகத்து 01 - பின்வரும் விலக்கல்கள் நீக்கப்பட்டு தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியைச் செலுத்துவதற்கான பொறுப்பிற்குட்படுத்தப்பட்டன.

- பன்னாட்டு போக்குவரத்துப் பணிகளை வழங்கும் நோக்கத்திற்குத் தேவைப்பட்ட எந்தவொரு பொருட்களினதும் வழங்கல் அதாவது சிறிலங்கன் எயார்லையின் லிமிடெட், மிகின் லங்கா பிறைவேற் லிமிடெட் அல்லது எயார் லங்கா கேட்டறிங் சேர்விஸஸ் லிமிடெட் என்பனவற்றிற்கான பொருட்கள்.
- ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் அல்லது லக்சதொசாவினால் வழங்கப்படும் ஏதேனும் பொருட்கள் அல்லது பணிகளின் வழங்கல்.
- உப ஒப்பந்தக்காரர் தவிர்ந்த ஒப்பந்தக்காரரினால் வழங்கப்படும் கட்டுமானப் பணிகள்.
- உள்நாட்டுச் சுற்றுலா தொடர்பான பயண முகவர்களின் பணிகள் (வங்கியினூடாகப் பெறப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளில் காணப்படும் பணிகள் தவிர்ந்தவை).
- வதிவிட தொடர்மாடி மனைகளின் வழங்கல்.

**கலால் தீர்வை**

2017 சனவரி 01 - போத்தல்களில் அடைக்கப்படட கள்ளின் மீதான தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.30 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூ.50 இற்கு அதிகரிக்கப்பட்டது.

- வருடாந்த வடிசாலை உரிமக் கட்டணம் (பனஞ்சாராயம் தவிர) ரூ.100 மில்லியனிலிருந்து ரூ.1 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது.
- வெளிநாட்டு குடிவகை உரிமத்துடன் சேர்த்து வழங்கப்படுகின்ற சாராய உரிமத்தின் மீது ரூ.100,000 கொண்ட உரிமக் கட்டணம் விதிக்கப்பட்டது.
- போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் விற்பனை மீது ரூ.50,000 கொண்ட உரிமக் கட்டணமொன்று விதிக்கப்பட்டது.

2017 மாச்சு 13 - வெளிநாட்டுக் குடிவகையின் இறக்குமதி மீதான உரிமம் வழங்குகின்ற செயன்முறையினை இலகுபடுத்துவதற்காக அரச வர்த்தமானிப் பத்திரமொன்று வெளியிடப்பட்டது.

2017 நவெம்பர் 10 - எடுத்துச் செல்ல முடியாத குடிபானங்களின் இறக்குமதியில் கலால் தீர்வை கிலோ கிறாம் தொகுதியொன்றுக்கு ரூ.15ஆக விதிக்கப்பட்டுள்ளது.

- மதுபானத்தின் மீதான கலால் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது:
    - பதப்படுத்தப்பட்ட சாராயம் மற்றும் தேங்காய், பனை, வெல்லம் என்பவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட மதுபானமானது ஒரு லீற்றருக்கு ரூ.1,850 இலிருந்து ரூ.3,300 ஆக அதிகரித்தது.
    - இலங்கையிலுள்ள உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டுக் குடிபான உற்பத்திகள் ஒரு லீற்றர் மதுபானத்திற்கு ரூ.2,030 இலிருந்து ரூ.3,300 ஆக அதிகரித்துள்ளது.
    - மோல்ட் சாராயமானது லீற்றருக்கு ரூ.160 மற்றும் லீற்றருக்கு ரூ.315 இலிருந்து (முறையே, சரியான பலத்துக்கு ஐந்து வீதம் குறைவான மற்றும் சரியான பலத்துக்கு ஐந்து வீதம் கூடுதலான) மது லீற்றருக்கு 2,400 ஆக அதிகரித்தது.
    - கள்ளு அல்லது ஏதாவது தானியங்களிலிருந்தான மதுபானம் தவிர்ந்த ஏனைய மதுபானம் தயாரிப்பு ஒரு லீற்றர் சாராயத்திற்கு ரூ.1,120 இலிருந்து ரூ.2,400 ஆக அதிகரித்தது.
- ஏதனோல் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மீது விதிக்கப்பட்ட கலால் தீர்வு பின்வருமாறு;
    - தென்னங்கள்ளு லீற்றருக்கான தீர்வை ரூ.5
    - வெல்ல மது லீற்றருக்கான தீர்வை ரூ.10

- ரைஸ் பல்ப், மைஸ் பல்ப், புரூட்ஸ் பல்ப் தீர்வை ரூ.10

2018 சனவரி 01 - வருடாந்த மது உரிமை கட்டணமானது திருத்தப்பட்டுள்ளது.

**கலால் (சிறப்பு ஏற்பாடுகள்)**

2017 ஓகத்து 18 - எச்எஸ் குறியீடுகள் 87.04இன் கீழ் பொருட்களின் போக்குவரத்திற்கான உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வை அலகொன்றிற்கு ரூ.1,000,000 இலிருந்து அலகொன்றிற்கு ரூ.700,000 இற்குக் கீழ் நோக்கித் திருத்தப்பட்டது.

- எச்எஸ் குறியீடுகள் 87.11இன் கீழ் இயந்திர மிதிவண்டி உட்பட உந்து ஈருருளிகள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது.

**சுங்கத் தீர்வை**

2017 பெப்புருவரி 01 - டீசல் இறக்குமதி மீது லீற்றரொன்றிற்கு ரூ.3 சுங்கத் தீர்வைத் தளர்த்தல் அனுமதிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.12 ஆகும்.

- பெற்றோலியத்தின் இறக்குமதி மீது லீற்றரொன்றிற்கு ரூ.10 சுங்கத் தீர்வைத் தளர்த்தல் அனுமதிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் லீற்றரொன்றிற்கு ரூ.25 ஆகும்.

2017 பெப்புருவரி 17 - விலங்குத்தீன் உற்பத்திகளுக்கான உள்ளீடுகளின் இறக்குமதி, வில்லுத்தகடுளைத் தயாரிப்பதற்கான கலப்பு உருக்கு பாளம் மற்றும் உருவமைக்கப்பட்ட கட்டடங்களின் தயாரிப்பிற்கான உருக்கு என்பன சுங்கத் தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டன.

- பதப்படுத்தப்படாத வடிவிலான பொலிமர், சோயா அவரை, டயர், உருக்கு, போல் பெயாறிங், ஸ்பார்க்கிங் பிளக்குகள் மற்றும் மின்கலங்கள் என்பனவற்றின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை திருத்தப்பட்டது.

2017 யூலை 08 - பால் மா மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.180 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.223 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.2 ஆகும்.

2017 ஓகத்து 02 - கோதுமைத் தானியம் மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றுக்கு ரூ.3 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.6 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.6 ஆகும்.

2017 ஒத்தோபர் 07 - ரூ.30 இற்கான முழு சுங்கத்தீர்வைத் தளர்த்தல் கஜு கடலையின் இறக்குமதி மீது அனுமதிக்கப்பட்டது.

2017 திசெம்பர் 15 - டீசல் மீதான சுங்கத்தீர்வை தளர்த்தல் லீற்றர் ஒன்றுக்கு ரூ.3 இலிருந்து ரூ.6 இற்கு அதிகரித்தது. எனவே, பிரயோகிக்கக்கூடிய விகிதம் லீற்றர் ஒன்றிற்கு ரூ.9 ஆகும்.

- பெற்றோல் மீதான சுங்கத்தீர்வை தளர்த்தல் லீற்றர் ஒன்றுக்கு ரூ.25 இலிருந்து ரூ.20 இற்கு குறைவடைந்தது. எனவே, பிரயோகிக்கக்கூடிய விகிதம் லீற்றர் ஒன்றுக்கு ரூ.15 ஆகும்.

2017 திசெம்பர் 22 - டீசல் மீதான சுங்கத்தீர்வை தளர்த்தல் லீற்றர் ஒன்றிற்கு ரூ.6 இலிருந்து ரூ.11 இற்கு அதிகரித்தது. எனவே, பிரயோகிக்கக்கூடிய விகிதம் லீற்றர் ஒன்றிற்கு ரூ.4 ஆகும்.

- பெற்றோல் மீதான சுங்கத்தீர்வை தளர்த்தல் லீற்றர் ஒன்றிற்கு ரூ.20 இலிருந்து ரூ.23 ஆக குறைவடைந்தது. எனவே, பிரயோகிக்கக்கூடிய விகிதம் லீற்றர் ஒன்றிற்கு ரூ.12 ஆகும்.

**சுங்க மதிப்பீடு**

2017 மாச்சு 15 - ஆடைத் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி வியாபாரத்திலுள்ள தொழில்முயற்சிகளினால் நிபந்தனைகளின் அடிப்படையில் சுங்க இறக்குமதித் தீர்வை விலக்களிப்புக்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொறிகள் மற்றும் கருவிகளின் விற்பனைகளுக்கான சுங்கப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக முறையொன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது.

2017 ஓகத்து 14 - நிபந்தனைகளின் அடிப்படையிலான பிரயோகிக்கக்கூடிய விலக்களிப்புக்களின் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 2015 நவெம்பர் 19 அன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி அல்லது பதிவுசெய்யப்பட்ட ஊந்து ஊர்திகளின் விற்பனைகளுக்கான சுங்கப்பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டது.

**செஸ்**

2017 ஓகத்து 02 - கோதுமை மா மீதான செஸ் கி. கிறாமொன்றுக்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.15 இற்குக் குறைக்கப்பட்டது.

2017 நவெம்பர் 27 - அடையாளங் காணப்பட்ட 253 பொருட்களின் மீதான செஸ் வரி நீக்கப்பட்டது.

**சிறப்புப் பண்டத் தீர்வை**

2017 சனவரி 07 - ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பனவற்றின் இறக்குமதி மீது மூன்று மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.15 சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

2017 சனவரி 19 - மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தமா மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

- மரக்கறி எண்ணெயின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றுக்கு ரூ.20 இனால் குறைக்கப்பட்டது.

2017 சனவரி 28 - ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பனவற்றின் மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 சிறப்புப் பண்டத் தீர்வைத் தளர்த்தல் 30 நாட்கள் காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கத்தக்க விகிதம் கி.கிறாமிற்கு ரூ.5 ஆகும்.

2017 பெப்புருவரி 17 - உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

- சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்புக்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பின்வரும் விதத்தில் ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.

    - முழுப் பருப்பு கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.10 இற்கு
    - உடைக்கப்பட்ட பருப்பு கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.15 இற்கு

2017 பெப்புருவரி 24 - மரக்கறி எண்ணெயின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றுக்கு ரூ.20 இனால் குறைக்கப்பட்டது.

2017 பெப்புருவரி 27 - ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பனவற்றின் மீது விதிக்கப்பட்ட கி.கிறாமொன்றிற்கு ரூ.10 சிறப்புப் பண்டத் தீர்வைத் தளர்த்தல் 30 நாட்கள் காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கத்தக வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.5 ஆகும்.

2017 மாச்சு 08 - மக்கரல், பட்டாணி, கொண்டைக் கடலை, தட்டைப் பயறு, குரக்கன் மற்றும் வெள்ளைப் பளிங்குச் சீனி தவிர்ந்த சீனி என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

2017 மாச்சு 28 - ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பனவற்றின் மீது விதிக்கப்பட்ட கி.கிறாமொன்றிற்கு ரூ.10 சிறப்புப் பண்டத் தீர்வைத் தளர்த்தல் 2017 மாச்சு 31 வரை நீடிக்கப்பட்டது. எனவே பிரயோகிக்கக்கூடிய வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.5 ஆகக் காணப்பட்டது.

2017 ஏப்பிறல் 01 - ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இற்கு 60 நாட்கள் காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது.

2017 ஏப்பிறல் 02 - கருவாடு, யோக்கட், வெண்ணெய்க்கட்டி, பாற் பரவற் பொருட்கள், உள்ளி, உடன் தோடம்பழங்கள், திராட்சை, அப்பிள், வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2017 மே 08 | - | மீன், முள்ளற்ற மீன் துண்டுகள் மற்றும் ஏனைய மீன் இறைச்சியையும் தவிர்ந்த உடன் அல்லது குளிரூட்டப்பட்ட அல்லது உறையவைக்கப்பட்ட மீன், பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்த்தியவை), தோடம்பழங்கள் (உலர்த்தியவை), பியர்ஸ், செரி, முத்திரிகை வற்றல் மற்றும் விதை, கிவி பழம் மற்றும் எச்எஸ் குறியீட்டு இல. 0810.90.90 இன் கீழான ஏனைய உடன் பழங்கள் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 மே 21 | - | சின்ன வெங்காயம், பேரீச்சம்பழம், திராட்சை (உலர்ந்தது), நற்சீரகம் மற்றும் பெருஞ்சீரகம் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | உமி நீக்கப்பட்ட அரிசி (மண்ணிறம்) மீது விதிக்கப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ரூ.5 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. |
| 2017 மே 31 | - | ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2017 ஓகத்து 31 வரை நீடிக்கப்பட்டது. |
| 2017 யூன் 06 | - | மாஜரீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | சீனியின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இனால் ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2017 யூன் 07 | - | மீன் மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.25 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வைத் தளர்த்தல் 30 நாட்கள் காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கக்கூடிய வீதம் 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.50 ஆகும். |
| 2017 யூலை 01 | - | உடைக்கப்பட்ட அரிசி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.5 கொண்ட சிறப்புப் பண்ட தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. |
| 2017 யூலை 19 | - | மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம்மா, மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 யூலை 27 | - | உமி நீக்கப்பட்ட மண்ணிற அரிசி, ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2017 திசெம்பர் 31 வரை கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு சதம் 25 இற்குக் குறைக்கப்பட்டது. |
| 2017 ஓகத்து 01 | - | முரல் மற்றும் மல்லன் என்பனவற்றின் உறைய வைக்கப்பட்ட மீன் துண்டுகளின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றுக்கு ரூ.75 என்ற தீர்வை பெறுமதிகளில் உயர்ந்த பெறுமதிக்கு மூன்று மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| | - | சோளத்தின் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது. |
| 2017 ஓகத்து 02 | - | உடைக்கப்பட்ட அரிசியின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2017 திசெம்பர் 31 வரை கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு சதம் 25 இற்குக் குறைக்கப்பட்டது. |
| 2017 ஓகத்து 16 | - | சீனியின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.8 இனால் ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2017 ஓகத்து 17 | - | உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் மைசூர் பருப்பு என்பனவற்றின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 ஓகத்து 24 | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 செத்தெம்பர் 08 | - | மக்கரல், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு மற்றும் குரக்கன் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 ஒத்தோபர் 02 | - | கருவாடு, யோகட், வெண்ணெய் கட்டி, பாற்பரவற் பொருட்கள், உள்ளி, உடன் தோடம்பழம், திராட்சை, அப்பிள், வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2017 நவெம்பர் 01 | - | முரல் மற்றும் மல்லன் என்பவற்றின் உறைய வைக்கப்பட்ட மீன் துண்டுகளின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கிறாமொன்றிக்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிக்கு 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ. 75 என்ற தீர்வைப் பெறுமதிகளில் உயர்ந்த பெறுமதிக்கு ஆறு மாதகாலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2017 நவெம்பர் 08 | - | முள்ளற்ற மீன் துண்டுகள் மற்றும் ஏனைய மீன் இறைச்சியையும் தவிர்ந்த உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட மீன் (மெக்கரல் மீன், முரல் மீன் மற்றும் மல்லன் மீன் தவிர்ந்த) இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ. 50 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு 10 சதவீதம் அல்லது கி. கிறாமொன்றிக்கு ரூ. 100 என்ற தீர்வை பெறுமதிகளில் உயர்ந்த பெறுமதிக்கு ஆறு மாத காலப்பகுதிக்கு திருத்தப்பட்டது. |
| | - | பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்த்தியவை), தோடம்பழங்கள் (உலர்த்தியவை), பியர்ஸ், செரி, முந்திரிகை வற்றல் மற்றும் விதை, கிவிப்பழம் மற்றும் எச்எஸ் குறியீட்டு இல. 0810.90.90 இன் கீழான ஏனைய உடன் வழங்கல் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 நவெம்பர் 09 | - | பின்வரும் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது.<br>- நெத்தலிக் கருவாடு, உலரவைத்தது, உப்பிடப்படாதது கி.கிறாமொன்றிக்கு ரூ. 11 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 1இற்கு<br>- கருவாடு கி.கிறாமொன்றிற்கு ரூ. 102 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 52 இற்கு<br>- உருளைக்கிழங்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 1 இற்கு<br>- பெரிய வெங்காயம் கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 1 இற்கு<br>- பருப்பு (முழுமையானது) கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 1 இற்கு<br>- பருப்பு (உடைக்கப்பட்ட) கி.கிறாமொன்றிற்கு ரூ. 15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 3 இற்கு |
| | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலத்திற்கு குறைக்கப்பட்டது. |
| 2017 நவெம்பர் 21 | - | சின்ன வெங்காயம், பேரீச்சம்பழம், திராட்சை (உடன் மற்றும் உலர்ந்தது), நற்சீரகம் மற்றும் பெருஞ்சீரகம் என்பவற்றின் இறக்குமதிகளின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2017 திசெம்பர் 14 | - | முரல் மீன், மல்லன் மீன் மற்றும் தோரா மீன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.75 என்ற தீர்வை பெறுமதிகளில் உயர்ந்த பெறுமதியிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 25 ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| | - | தேங்காய் சொட்டு இறக்குமதி பிரதான கி.கிறாமொன்றிற்கு ரூ. 1 சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாதக் காலப்பகுதிக்கு விடுக்கப்பட்டது. |
| 2017 திசெம்பர் 15 | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாதக் காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2018 சனவரி 01 | - | உமி நீக்கப்பட்ட மண்ணிற அரிசி, ஓரளவு தீட்டப்பட்ட அல்லது முழுமையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசி, நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை), சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) என்பவற்றின் இறக்குமதி மீதான கி.கிறாமொன்றிற்கு 25 சதம் கொண்ட சிறப்புப் பண்ட வரி 2018 மாச்சு 31 திகதி வரை நீடிக்கப்பட்டது. |
| 2018 சனவரி 19 | - | மாசிக் கருவாடு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம்மா மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பவற்றில் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை ஆறு மாதக் காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | துருவப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாற்கட்டிகளின் எல்லா வகையின் இறக்குமதிகள் மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ.200 சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாதக் காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 01 | - | சோளம் இறக்குமதி மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ. 10 சிறப்புப் பண்டத் தீர்வை 31 நாட்களுடைய காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2018 பெப்புருவரி 16 | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 24 | - | உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.1 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ. 30 இற்கு 2018 மாச்சு 31 வரை அதிகரிக்கப்பட்டது. |
| 2018 மாச்சு 08 | - | மக்கரல், பட்டாணி, கொண்டைக் கடலை, தட்டைப் பயறு மற்றும் குரக்கன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாதக் காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |

### துறைமுக மற்றும் விமான நிலையம் அபிவிருத்தித் தீர்வை

| | | |
|---|---|---|
| 2017 நவெம்பர் 10 | - | அடையாளம் காணப்பட்ட 950 பொருட்களுக்கான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது. |

### முத்திரைத் தீர்வை

| | | |
|---|---|---|
| 2017 பெப்புருவரி 21 | - | கொள்கைக் காப்புறுதி, நிதிக் குத்தகை உடன்படிக்கைகள் மற்றும் தவணைக் கொள்வனவு உடன்படிக்கை என்பனவற்றின் மீதான முத்திரைத் தீர்வையைச் செலுத்தவேண்டிய பொறுப்பிற்கு உட்படும் உந்து ஊர்தி வகைகள் குறித்துரைக்கப்பட்டன. |

### புறப்படுகைத் தீர்வை

| | | |
|---|---|---|
| 2017 சனவரி 01 | - | புறப்படுகை தீர்வை ஐ.அ.டொலர் 30 இலிருந்து ஐ.அ.டொலர் 50 இற்கு அதிகரிக்கப்பட்டது. |

### ஏனையவை

| | | |
|---|---|---|
| 2017 செத்தெம்பர் 01 | - | இணையத்தளப் பணிகள் மீதான தொலைத்தொடர்பூட்டல் தீர்வை நீக்கப்பட்டது. |
| 2017 நவெம்பர் 08 | - | தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்கள் தொடர்பாக தொலைக்காட்சி நாடக, திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்கள் தீர்வை செலுத்தவேண்டியது அதிகரிக்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | ரூ. 200 சிம் செயல்படுத்துகை தீர்வையானது விதிக்கப்பட்டது. |
| | - | இலத்திரனியல் கார்கள் மற்றும் டிராக்டர்கள் தவிர ஏனைய ஊர்திகளுக்கு காபன் வரி விதிக்கப்பட்டது. |

### அரசாங்க செலவினம்

| | | |
|---|---|---|
| 2017 மார்ச் 08 | - | இலங்கைப் பொறியியல் பணியிலுள்ள அலுவலர்களின் கட்டாய ஓய்வுபெறும் வயதெல்லையினை 2017 சனவரி 01ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் 61 ஆண்டுகள் வரை நீடிக்கும் விதத்தில் 06/2017ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2017 யூன் 09 | - | பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக முப்படைகளின் ஊனமுற்ற அலுவலர்களுக்கும் அவர்களது விதவைகளுக்கும் 2017 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் "ரனவிரு சுரக்கும் கொடுப்பனவு" வழங்கும் விதத்தில் 01/2017ஆம் இலக்க சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |

### படுகடன் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2017 சனவரி 10 | - | 2017இல் ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் எல்லை வரை இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. |
| 2017 ஏப்பிறல் 24 | - | புளூம்பேர்க் வர்த்தகப்படுத்தல் தளத்தினை (நிர்ணயிக்கப்பட்ட வருமானக் குறியீடு) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.<br>- மீள்கொள்வனவு வீதங்கள், காலங்கள் மற்றும் அளவுகளைக் குறிப்பிடுதல்<br>- கருமபீடத்தில் மேற்கொள்ளப்படும் ரூ.100 மில்லியன் அல்லது அதற்கும் மேற்பட்ட அத்தகைய அனைத்து மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களினதும் விளைவு வீதங்கள், காலம் மற்றும் அளவுகள் என்பனவற்றை 30 நிமிடங்களுக்குள் அறிவித்தல்.<br>- அனைத்து பங்குபற்றுநர்களுக்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல். |
| 2017 மே 08 | - | 2017இற்கான இலங்கை அபிவிருத்தி முறிகளை ஐ.அ.டொலர் 3,000 மில்லியன் வரையில் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. |
| 2017 யூலை 27 | - | திறைசேரி முறிகளுக்காக புதிய ஆரம்ப வழங்கல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. கிரமமான மாதாந்த திறைசேரி முறி ஏலங்கள் இம்முறையினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறைமையின் கீழ், திறைசேரி முறிகளின் ஒவ்வொரு வழங்கலுக்குமாக மூன்று நியம கட்டங்கள் காணப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| | | கட்டம் I - நியாயமான சந்தை விலைக்குறிப்பீடுகளினூடாக போட்டித்தன்மை வாய்ந்த பல்வேறுபட்ட விலை ஏலங்களில் அறிவிக்கப்பட்ட முழு அளவுகளினதும் வழங்கலைக் கண்டறிதல். |
| | | கட்டம் II - சுயாதீனமாக திறந்து வைத்தல், அளவினை அடிப்படையாகக் கொண்ட விலைக்குறிப்பீடு |
| | | கட்டம் III - கட்டம் I கீழ் ஆகக்குறைந்தது வெளிப்படுத்தப்பட்ட அசைவுகளில் 60 சதவீதமானவை வழங்கப்படுகின்றது எனும் நிபந்தனையில், கட்டம் I மற்றும் கட்டம் II காலப்பகுதியில் காணப்பட்ட ஏதேனும் குறைவான ஒதுக்குகள் கட்டாய அடிப்படையில் முதன்மை வணிகர்களுக்கு வழங்கப்படுகின்றன. |
| 2017 திசெம்பர் 14 | - | 2018 இற்கான இலங்கை அபிவிருத்தி முறிகளை ஐ.அ.டொலர் 2,500 மில்லியன் வரையில் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. |